# 1

# தேசமும் சுயநிர்ணயமும்

- சி. சிவசேகரம்

## கட்டுரை நோக்கம்

தேசம் என்பது விளக்கவியலாத ஆனால் வலுவான தனிமனித அடையாளஞ் சார்ந்த ஒரு அமைப்பு எனும் கருத்துநிலையும் தேசம் வரலாற்றுவழி வளர்ந்த இன அடையாளஞ் சார்ந்தது எனுங் கருத்து நிலையும் அரசை மையப்படுத்தும் கருத்துநிலைகளும் பிறவும் தேசத்தின் இயல்பையும் தோற்றத்தையும் விளக்க முயன்றுள்ளன (Josep R. Llobera, 1999). ஒரு தேசத்தின் தோற்றமும் அதன் நிலைப்பின் அடிப்படையும் எவ்வாறாயினும், தேசம் பற்றிய சமகால உரையாடல்கள் தேச-அரசு என்பதை மையப்படுத்துவன. எனவே அது சார்ந்து எழும் தேசியப் பிரச்சனைகளின் நோக்கிலேயே இக்கட்டுரை அமைகிறது.

## தேச அரசுகளின் தோற்றம்

இனமும் பிரதேசமும் சார்ந்த அடையாளங்கள் பல்லாயிரம் ஆண்டுகள் பழையன. அத்தகைய அடையாளங்களுடன் நாடுகளும் அரசுகளும் இருந்தபோதும், முதலாளியம் நிலைபெற்ற பின்பே தேசம் என்ற கருத்தும் அதை அரசொன்றுடன் கருதும் நடைமுறையும் உருவாயின. முதலாளிய அரசு தேச - அரசு என்ற மதிப்பான அடையாளம் பெற்ற பின், தாழ்நிலையில் இருந்தோரும் அரசிற் தமக்கும் பங்குண்டு என நம்பத் தலைப்பட்டனர். இவ்வாறு, தேசியம் முதலாளிய நலன்கட்குக், குறிப்பாக ஏகாதிபத்திய நலன்கட்கு, மிக உதவியது.

முதலாளிய அரசு தேச - அரசு என்ற மதிப்பான அடையாளம் பெற்ற பின், தாழ்நிலையில் இருந்தோரும் அரசிற் தமக்கும் பங்குண்டு என நம்பத் தலைப்பட்டனர். இவ்வாறு, தேசியம் முதலாளிய நலன்கட்குக், குறிப்பாக ஏகாதிபத்திய நலன்கட்கு, மிக உதவியது.

ஒரு மக்கள்-திரளும் பிரதேசமும் அரசாங்கமும் இறைமையும் தேச -அரசின் அடையாளமாயின. சுதந்திரமும் பிரதேச ஒருமையும் இறைமையும் பிற அரசுகளுடன் சமத்துவமும் சர்வதேச அரங்கில் தேச-அரசின் தராதரத்தைக் குறித்தன. வலிய தேச-அரசுகள் பிற நாடுகளைத் தம் ஆட்சிக்குட்படுத்தின. வலிய தேச அரசுட் சங்கமிக்காத ஒரு நாட்டினருக்கோ அவர்களின் மேனிலைச் சமூகப் பிரிவினருக்கோ சுதந்திர அரசாகும் தேவை எழலாம். அத்துடன், பிற நாடுகளை ஆதிக்கத்துக்கு உட்படுத்தும் தேவையால் வலிய தேச - அரசுகளிடையே போட்டி எழுகிறது. இத்தகைய சூழலில் ஒரு மக்கள் திரள் தேச - அரசாக அமைய வேண்டுவது ஒரு சர்வதேசப் பிரச்சினையாகிறது.

ஐரோப்பிய முதலாளியம் ஏகாதிபத்தியமாகி, நாடுகளை நாடுகள் அடக்கும் நிலையில் பேரரசுகட்குக் கீழ்ப்பட்ட நாடுகளின் சுதந்திரம் ஒரு முக்கிய பிரச்சினையானது. 20ஆம் நூற்றாண்டுத் தொடக்க முதல் நாடுகளின் சுதந்திரம் பற்றி நடந்த விவாதங்களில் நாடுகளின் சுயநிர்ணயத்துக்கு ஆதரவாகக் கருத்துரைத்த விளாடிமிர் லெனின் தனது சிந்தனைகளைத் தொகுத்து "The Right of Nations to Self-Determination" (தேசங்களின் சுயநிர்ணய உரிமை) எனும் விரிவான நூலாக 1914ல் சுயநிர்ணயக் கொள்கையைத் துணிந்து முன்வைத்தார் (Lenin's Collected Works, 1972:393–454). சுயநிர்ணய உரிமை ஒரு நாடு பிரிந்துபோகும் உரிமையை உள்ளடக்கத் தேவையில்லை என்றோரின் கருத்தை ஆணித்தரமாக மறுத்த லெனின், சுயநிர்ணயமென்பது பிரிந்துபோகும் உரிமைக் குறிக்கும் என்றார். பலவீனமான ரஷ்யப் பேரரசின் முடியாட்சி கவிழ்ந்த பின் அப் பேரரசுகள் ஒடுக்குண்ட தேசங்கள் சுயவிருப்பின் அடிப்படையில் ஒரு தேசிய ஒன்றியமாக அமைவதை ஊக்குவிக்க லெனின் தேசங்களின் சுயநிர்ணய-உரிமைக் கோட்பாட்டைப் பாவித்தார். அதன் பயனாக, சுயநிர்ணயக் கொள்கை, பிரிவினையை ஊக்குவித்தற்கு மாறாக, ஒற்றுமையை ஏற்படுத்தி 1922ல் சோவியத் ஒன்றியத்தின் தோற்றத்தை இயலுமாக்கியது.

சுயநிர்ணய உரிமையைக் கையாளுந் தேவை சார்ந்து, தேசம் என்பதற்கு வரைவிலக்கணம் தேவைப்பட்டது. ஜோசப் ஸ்ற்றாலின் (J.V. Stalin,J.V., 1913). அத் தொடர்பில் வகுத்த வரைவிலக்கணம் சமகாலத் தேசத்துக்குப் பொருந்தும் ஒரு விவரணமாகும்: "தேசம் என்பது, பொதுவான மொழி, பிரதேசம், பொருளியல் வாழ்வு, பொதுவானதொரு பண்பாடாகப் பரிணமிக்கும் உளவியற் தன்மை என்பனவற்றின் அடிப்படையில், வரலாற்றுவழி வடிவுபெற்ற ஒரு உறுதிப்பாடான மக்கள் சமூகமாகும்."

"தேசம் என்பது, பொதுவான மொழி, பிரதேசம், பொருளியல் வாழ்வு, பொதுவான தொரு பண்பாடாகப் பரிணமிக்கும் உளவியற் தன்மை என்பனவற்றின் அடிப்படையில், வரலாற்றுவழி வடிவுபெற்ற ஒரு உறுதிப்பாடான மக்கள் சமூகமாகும்."

ஒரு தேச-அரசை நடைமுறைச் சாத்தியமாக்குவன பற்றிக் கூர்ந்த கவனிப்பின் மீது அமைந்த இவ் வரைவிலக்கணம் தேசத்தின் அத்தியாவசியப் பண்புகளாகக் கொள்பவை, இன்றும் ஒரு தேசத்தை நடைமுறைச் சாத்தியமாக்கத் தேவையானவை. மதம் - தென்னாசியாவிற் சாதி - போன்ற சமூகக்-குழு அடையாளங்கள் தேசிய அடையாள உருவாக்கத்திற்கும் தேசிய இயக்கங்கட்கும் பங்களிப்பினும், தம்மளவில் அவை தேசத்தை வரையறுக்குங் காரணிகளல்ல. மொழி-பண்பாட்டு அடையாளங்கள் வரலற்றுப் போக்கில் மதஞ்சார்ந்து உருவானதால், யூகோஸ்லாவிய முஸ்லிம்கள் போன்று, மதஞ் சார்ந்த தேசிய இனங்கள் ஏற்கப்பட்டுள்ளன. மதம் மட்டுமே ஒரு தேசத்தை அமைக்கப் போதாது என்பதற்குப் பாகிஸ்தானின் வரலாறு தக்கதொரு சான்று. அவ்வாறே, மக்கள் உணராத தேசியமொன்றைச் செயற்கையாகப் புனைந்து நியாயப்படுத்திய "திராவிட நாடு" (சான்று: முரசொலி மாறன், ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?, முத்துவேல் பதிப்பகம், திருச்சி, இந்தியா, 1957) 1963ல் எளிதாகக் கைவிடப்பட்டது. அதற்கு மாற்றாக

முன்வைத்த "தமிழ் நாடு" என்ற கருத்து மொழி/இன உணர்வுகளைக் கிளறிய அளவுக்குப் பிரிவினைக் கோரிக்கையாகவில்லை. இந்தியாவில் காஷ்மீர், மணிப்பூர், நாகாலாந்து மாநிலங்களில் வரலாற்றுக் காரணங்களால் பிரிவினைக் கோரிக்கை வலுவாயுள்ளவுக்கு மொழிவாரியான பிரிவினைப் போக்கெதுவும் வலுவாயில்லாமை விசாரிக்கத்தக்கது. ஒரு தேசமோ தேசிய இனமோ தேச-அரசாகும் தகைமையுடையதால் மட்டும் அது பிரிவினையைக் கோராது என்பதை இது உணர்த்துகிறது.

இனத்துவக் கொள்கைகள் இனத்துவத்தைத் தேசியத்திற்கு வெளியில் (சிலவேளை தேசியத்திற்குச் சமமாக) வைப்பினும், தேசம் என்ற கருத்தாக்கமே வலிய அரசியல் அடையாளமாயுள்ளது. தேசியத்தின் முக்கியம் பற்றி முரண்படும் முக்கிய ஆய்வாளர்கள் மூவரின் தேசியம் பற்றிய கருத்துகளை நோக்குவோம்:

இனத்துவக் கொள்கைகள் இனத்துவத்தைத் தேசியத்திற்கு வெளியில் (சிலவேளை தேசியத்திற்குச் சமமாக) வைப்பினும், தேசம் என்ற கருத்தாக்கமே வலிய அரசியல் அடையாள மாயுள்ளது.

ஒஸ்ற்றிய சமூக-சனநாயகவாதி ஏனெஸ்ற் கெல்னர் தேசியம் என்பது "முதற்கண் அரசியல் அலகும் தேசிய அலகும் முழு உடன்பாடுடையனவாயிருக்க வேண்டும் எனக் கொள்ளும் ஒரு அரசியல் நெறியாகும்" எனத் தேசியத்தை வரையறுத்தார். இந்நெறியின் அடிப்படையில் தேசியத்தை ஒரு உணர்வுநிலையாகவோ இயக்கமாகவோ அதி சிறப்பாக வரையறுக்கலாம் என்று அவர் கருதினார் (Ernest Gellner, 1983:1). இடதுசாரி வரலாற்றாசிரியர் ஹொப்ஸ்பாம் தேசியத்தைப் பாதகமாக நோக்குகிறார். தேசம் என்பதற்கு சர்வவியாபகமான தேவை என ஏதுந் தேவையில்லை எனவும் "தன்னைத் தேசமாகக் கருதும் போதியளவு பெரிய மக்கள்-திரள் எதுவும் அவ்வாறே நடத்தப்படும்" எனவும் அவர் கூறியுள்ளார். தேச-அரசு அமைய முன் தேச உருவாக்கம் நிகழ்ந்தாலும், அரசின் தோற்றம் சில சமயம் தேச உருவாக்கத்தை முந்தலாமெனவும் அவர் சுட்டுகிறார்: உதாரணமாகப், பிரான்ஸ் தேச-உருவாக்கத்தின் போக்கிற் பல தேசங்கள் தம் அடையாளத்தை பிரான்ஸ் தேசத்துட் கரைத்தன (E.J. Hobsbawm, 1780: 8).

சமூகவியலாளர் பெனடிக்ற் அன்டர்ஸன், ஆளையாள் நேரிற் காணக்கூடிய பழங் கிராமச் சமூகத்தினும் பெரிய எச் சமூகமும், உள்ளார வரையறுக்கப்பட்டு இறைமை உடையதெனக் கற்பனை செய்த சமூகமே எனத் தேசியத்தை மறுத்தாலும், தேசங்களதும் தேசியத்தினதும் இருப்பையோ அரசியல் முக்கியத்தையோ மறுக்கவில்லை (B. Anderson, 1983:6).

தேசமோ தேசியமோ இயல்பானவையோ மாறாதவையோ அல்ல என்பதிலும் தேசமென்பது வரலாற்றின் விளைபொருளன்றி மனித உயிரியல் சார்ந்த ஒன்றல்ல என்பதிலும் அரசியல் வரலாற்றாளர்கள் ஒரு மனதுடையோராய்த் தெரிகின்றனர். எனவே "பொதுவான ஒரு ஊழலாலும் பொதுவான பண்பாலும் இணைந்த மக்கள் தொகுதி" என்பது போன்ற சூட்சுமமான கருத்துக்களை (Otto Bauer, 2000: 19-138) தேசத்துக்குப் பொருத்தும் முயற்சிகள் தோற்றன. தேசங்களின் தோற்றத்துக்கும் தேச அரசுகள் நிலைபெறுதற்கும் வரலாற்றுப்

பொருள்முதல்வாதக் காரணிகளே அடிப்படைகளாவன. தேச-அரசின் விருத்தியில் முதலாளியத்தின் பங்கு ஐயமற்றது என்பதால், ஒரு தேசியத்தை ஏற்கவோ மறுக்கவோ மனித இயல்பு சார்ந்த விளக்கங்களைத் தவிர்த்து அதை வரலாற்று நோக்கிற் கருதுவது புறவயமானது.

தேசமாயில்லாவிடினும் ஒரு தேசத்தின் அத்தியாவசியப் பண்புகளைப் பெரிதும் உடையதும் தேசமாக அமையும் ஆற்றலைக் கணிசமாகக் கொண்டதுமான சமூகங்களைக் குறிக்கத் தேசிய இனம் என்ற பதம் பொதுவாகப் பயன்படும். பல்லின அல்லது பல்-தேசிய- இனத் தேச-அரசுக் கட்டமைப்பு ஒன்றுள் பிற இனங்களுடன் உடன்வாழ்வு பிரச்சினைக்குட்படின் ஒரு தேசிய இனம் தன்னை ஒரு தேசமாக அறிவித்துத் தன்னை ஒரு தேச-அரசாக நிறுவ முற்படலாம்.

முன்னேறிய முதலாளியம் ஏகாதிபத்தியமான பின், பன்னாட்டு மூலதனம் தேச எல்லைகளைத் தாண்டியதால், முதலாளிய விருத்தியுடன் நெருங்கப் பிணைந்த தேச-அரசு என்ற கருத்தாக்கம், ஏகாதிபத்தியம் தன் உலகமயமாதற் செய்நிரலூடு உலக ஆதிக்கத்தை நாடுகையில், வலிய முதலாளிய நாடுகளிற் பயனிழப்பதுடன் முதலாளிய நலன்கட்குக் கேடாகலாம். சர்வதேசப் பண்பைப் பெற்ற மூலதனத்துக்குத் தேச-அரசாற் பயன் குறைந்தமை நவதாராளவாதிகளும் உலகமயமாக்கலின் ஆதரவாளர்களும் தேசியத்தை மறுக்க வலியதொரு காரணமெனலாம்.

## கொலனியமும் தேசங்களின் உருவாக்கமும்

தேசமும் தேசியமும் பற்றிய ஆய்வுகள் பொதுவாக ஐரோப்பியச் சூழல் சார்ந்தவை. தேசங்களே இல்லா இடங்களிற் தேசங்களும் தேச-அரசுகளும் உருவாகக் கொலனியமும் நவ-கொலனியமும் ஆற்றிய பங்கை மேலைநாட்டு ஆய்வாளர்கள் அதிகங் கவனிக்கவில்லை. மூன்றாமுலக நாடுகளிற் கொலனியத்துக்குப் பிந்திய முதலாளிய விருத்தியின் தன்மை காரணமாக அந் நாடுகளிற் தேசியம் விருத்திபெற்ற விதம் ஐரோப்பாவிற் தேசியம் விருத்திபெற்ற விதத்தினின்று வேறுபட்டது. தேசியம் பற்றிய பொதுவான விளக்கங்கள், ஐரோப்பாவின் தேசிய உணர்வும் தேசியமும் பற்றிய ஆழ்ந்த ஆய்வின் விளைவானவை.

தேசங்களே இல்லா இடங்களிற் தேசங்களும் தேச-அரசுகளும் உருவாகக் கொலனியமும் நவ-கொலனியமும் ஆற்றிய பங்கை மேலைநாட்டு ஆய்வாளர்கள் அதிகங் கவனிக்க வில்லை.

முதலாளியத்துக்கும் தேசிய விருத்திக்குமுள்ள உறவைக் கருதின், கொலனிகளில் முதலாளிய விருத்தி ஐரோப்பாவிற் போலன்றிப் புறத் தாக்கங்களாலேயே நிகழ்ந்தமையால், கொலனிகளிற் தேச உருவாக்கம் ஐரோப்பாவிற் தேச உருவாக்கத்தினின்று வேறுபட்டது. கொலனி ஆட்சிக் கீழோ பின்போ கொலனிய அல்லது நவகொலனிய வல்லரசுகளின் தேவைகளையொட்டியே "தேசங்கள்" உருவாயின. எனவே, கொலனிகளிற் தேச உருவாக்கத்தை வல்லரசுகளின் மேலாதிக்கப் போட்டி உட்பட்ட கொலனியச் சூழலை வைத்தே விளங்கவியலும்.

கொலனியொன்றிற் தேசிய விருத்திக்கும் முதலாளிய விருத்திக்கும் உறவு வலிதல்ல. மக்களும் கொலனியும் கொலனிய/ஏகாதிபத்தியச்

சுரண்டலுக்கு உட்பட்டதன் விளைவுகள் தேசிய விருத்தியைத் தீர்மானித்தன. கொலனி ஆட்சியின் இடத்திற்கு நவ-கொலனியம் வந்த பின், உள்ளூர் ஆதிக்க வர்க்க ஒடுக்குமுறைக்கோ ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கோ இரண்டினதும் இணைந்த ஒடுக்குமுறைக்கோ எதிர்வினையாக, ஒரு இனக்-குழுவினதோ தேசிய இனத்தினதோ பெயரிற் தேசியம் உருவாவதாற், கொலனிகளில் முதலாளியம் நிலைபெற முன்பு தொட்டே பிரபுத்துவச் சமூகங்களும் பழங்குடிச் சமூகங்களும் "தேசியத்துள்" இழுபட்டன.

யப்பான் தவிர்ந்த ஆசியாவிற் கொலனிய/ஏகாதிபத்திய வல்லரசுகளின் தேவைகட்கமைய முதலாளியம் வளர்ந்தது. ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நிலைமைகளும் அவ்வாறே. கொலனி ஆட்சிப் பிரதேசத்துக்கும் கொலனிய/ஏகாதிபத்திய வல்லரசுக்கும் ஏற்ப அயற் குறுக்கீட்டின் பாதிப்பு வேறுபட்டது. கொலனிகளதும் அரைக்-கொலனிகளதும் பிரபுத்துவச் சமூகங்களும் பிற தொல் சமூகங்களும் முதலாளிய உற்பத்தி உறவுகட்கு மாறிய விதமும் அளவும் அன்றைய சமூக அமைப்புடன் கொலனிய/ஏகாதிபத்திய நலன்களின் உறவாடல் மீது தங்கியிருந்தன. தேசியமும் தேசிய இயக்கங்களும் இப் பின்புலத்திலேயே உருவாயின.

கொலனிகளதும் அரைக்-கொலனிகளதும் பிரபுத்துவச் சமூகங்களும் பிற தொல் சமூகங்களும் முதலாளிய உற்பத்தி உறவுகட்கு மாறிய விதமும் அளவும் அன்றைய சமூக அமைப்புடன் கொலனிய / ஏகாதிபத்திய நலன்களின் உறவாடல் மீது தங்கியிருந்தன

ஒவ்வொரு பிரதேசத்திலும் கொலனியத் தாக்கம் கொலனிய வல்லரசின் தாயகத்தில் முதலாளிய உற்பத்தியின் முன்னேற்றத்திலும் பிரதேசத்தின் அதி-முக்கிய சமூக அமைப்பின் மீதும் தங்கியிருந்தது. 18ஆம் நூற்றாண்டின் பின் கொலனிகளைக் கைப்பற்றும் போர்கள் நின்றாலும் ஆதிக்கப் போட்டி தொடர்ந்தது. தேச எல்லைகளற்ற பெருநிலப்பரப்புகளிற் கொலனிய வல்லரசுகளின் நலன்கட்கு ஏற்பத் "தேசங்களும்" தேச எல்லைகளும் வகுக்கப்பட்டமையை இலத்தீன் அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் நாடுகளின் உருவாக்கம் தெளிவாக உணர்த்தும். மாறாக, ஐரோப்பாவினும் பன்மையான இன, மொழி, மதப், பண்பாட்டு அடையாளங்களைக் கொண்ட ஆசிய நிலப்பரப்பான இந்தியா பிரித்தானியக் கொலனியத்தின் மூலம் ஒரு தனி அரசானது. அதையொத்த பன்மைத்துவமுடைய விசாலமான இந்து சமுத்திரத் தீவுக் கூட்டத்தை டச்சுக் கொலனியம் இந்தோனேசியா எனும் நாடாக்கியது. ஆனால் இரண்டினும் பெரிய பிரதேசமான சீனாவில் நேரடிக் கொலனி ஆட்சியை நிறுவ ஒரு வல்லரசுக்கும் இயலாவிடினும், மூலோபாய முக்கியமுள்ள சிறு பகுதிகள் அந்நியர் வசமாயின. இன-மொழி-பண்பாட்டு அடிப்படைகளிற் தனித்துவமான வியட்நாம், கம்போடியா, லாவோஸ் பிரதேசங்களை பிரெஞ்சுக் கொலனியம் இந்தோசீனம் எனும் கொலனிய சமஷ்டியாக்கியது.

கொலனி ஆட்சியின் முடிவோடு ஏகாதிபத்தியம் நவகொலனியக் கட்டுப்பாட்டை நாடினும், இயன்றவிடத்துத் தேசிய அடிப்படையின்றி நாடுகளை அமைத்தும் நாடுகளின் விடுவிக்கப்படாத பகுதிகளைக் கைவிடாமலும், நேரடிக் கொலனியக் கட்டுப்பாடு நீடித்தது. சீனாவின்

தாய்வான் தீவில் அமெரிக்க உதவியுடன் 1949ல் அமைந்த சீனக் குடியரசை, 1972 வரை, சீனாவின் சட்டரீதியான அரசாங்கமாக ஐ.நா. ஏற்றது. சீனப் பிரதேசங்களான ஹொங்கொங்கும் மக்காவும், முறையே, பிரித்தானியாவிடமும் போர்த்துக்கலிடமும் இருந்து மீள ஏறத்தாழ 20ஆம் நூற்றாண்டின் முடிவு வரை எடுத்தது. சிறிய சமுத்திரத்-தீவுகள் பல இன்னமுஞ் சில ஐரோப்பிய நாடுகளதும் அமெரிக்காவினதும் "உடைமைகளாக" உள்ளன.

பிரெஞ்சுக் கொலனி ஆட்சி நீங்கிய வியட்நாமில் 1975 வரையும் ஜப்பானிய ஆக்கிரமிப்பு நீங்கிய கொரியாவில் இன்று வரையும் அமெரிக்க ஆதிக்கம் நிலைக்கவேண்டி, இரு நாடுகளும் வடக்கு-தெற்காகப் பிரிந்தன. மாறாக, மலாயரின் மேலாண்மையை உறுதிசெய்ய, போர்னியோ (கலிமன்டான்) தீவின் வடக்கிலுள்ள சபாவையும் சராவக்கையும் சிங்கப்பூரையும் மலாயாவுடன் இணைத்து 1963ல் மலேசிய சமஷ்டி உருவாவதை, இந்தோனேசியாவின் கடும் எதிர்ப்பின் நடுவே, ஏகாதிபத்தியம் ஊக்குவித்தது. 1964ல் சிங்கப்பூரில் நடந்த இனமோதல் ஒன்றையடுத்து, சிங்கப்பூரை மலேசிய சமஷ்டியினின்று விலக்கியமை இன்னொரு விடயம். எனினும், கலிமன்டான் தீவின் வடக்கில் எண்ணெய் வளமிக்க சிறிய புரூனாய் சுதந்திர சுல்தானிய அரசாக இருப்பதையும் ஏகாதிபத்தியம் உறுதிப்படுத்தியது.

கொலனி ஆட்சி போன பின் இன, மொழி, பண்பாட்டு அடிப்படை களிலும் பொதுவான சமூக-பொருளாதாரத் தேவைகள் கருதியும் கொலனியம் பிரித்த நாடுகளை ஒன்றிணைக்கும் முயற்சிகள் நடந்துள்ளன.

கொலனி ஆட்சி போன பின் இன, மொழி, பண்பாட்டு அடிப்படைகளிலும் பொதுவான சமூக-பொருளாதாரத் தேவைகள் கருதியும் கொலனியம் பிரித்த நாடுகளை ஒன்றிணைக்கும் முயற்சிகள் நடந்துள்ளன. தென்னமெரிக்காவிற் கொலனிய எதிர்ப்புப் போரில் முக்கிய பங்கு வகித்த சிமோன் டி பொலிவார், கொலனிய நீக்கத்தின் பின் முழுத் தென்னமெரிக்காவையும் ஒன்றிணைக்க விரும்பினார். பொது மொழியினதும் பிரதான பண்பாட்டினதும் அடிப்படையில், இன்றைய கொலம்பியா, வெனெசுவேலா, ஈக்குவடோர், பனாமா ஆகிய நாடுகளைக் கொண்டு நிறுவிய விசால கொலம்பியக் குடியரசு (Republic of Gran Colombia) 12 ஆண்டுகள் (1829-1841) நிலைத்தது. 1990களின் முடிவையண்டி வலுத்த தென்னமெரிக்க ஏகாதிபத்திய-விரோத அலையிடையே பொலிவாரிய உந்துணர்வு, பன்னிரு (இப்போது பத்து) லத்தின் அமெரிக்க, கரிபியன் நாடுகளைக் கொண்ட பொலிவாரியக் கூட்டமைப்பை 2004ல் தோற்றுவித்தது.

பல நாடுகளாகப் பிரிந்த அரபு மொழி பேசும் நாடுகள் சிலதையேனும் ஒன்றிணைக்கும் முயற்சியான ஐக்கிய அரபுக் குடியரசும் (எகிப்தும் சிரியாவும், 1958-1961) ஈராக்கையும் இணைத்து அக் குடியரசை மீள நிறுவும் ஈராக்கிய ஆலோசனையும் தோற்றன. எனினும் இன்று அரபு அணி (Arab League) எனும் நெகிழ்வான கூட்டணியும் அதினும் நெருக்கமான அரபு வளைகுடா கூட்டுறவுக் கழகமும் (Gulf Cooperation Council) உள்ளன.

குர்தியப் பிரதேசங்களைக் கொண்ட ஒரு நாட்டை நிறுவும் அபிலாசைக்கு அப்பிரதேசங்கள் நான்கு நாடுகளின் பகுதிகளாகப் பிரிந்துள்ளமை தடையாயுள்ளது. இரண்டாம் உலகப் போரை அண்டிப் பிரிந்த நாடுகளில் வியட்நாம் 1975இலும் ஜேர்மனி 1989இலும் மீள இணைந்தாலும் கொரியப் பிரிவினை அமெரிக்கக் குறுக்கீட்டால் மேலுந் தொடர்கிறது.

நாடுகளாகவோ நாடுகளிடையிலோ பிரிந்த மக்கள் இணைவை விரும்பினும், மொழியும் பண்பாடும் தொடர்ச்சியான பிரதேசமும், தம்மளவில், ஒரு தேச அரசை உருவாக்கப் போதா என்பது சமகால யதார்த்தம். உலகப் பொருளாதாரத்தின் பன்னாட்டுத் தன்மையும் நாடுகள் பிரதேச அல்லது அரசியல் அடிப்படையில் ஒத்துழைக்கும் தேவையும் ஐரோப்பிய ஒன்றியம், ஆசியான் (ASIAN), ஆபிரிக்க ஒன்றியம் (African Union), சார்க் (SAARC) ஆதிய பல பொருளாதார/ அரசியல் கூட்டுறவு அமைப்புகளைத் தோற்றுவித்தாலும் தேச அரசுகள் தமது இறைமையை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை.

நாடுகளாகவோ நாடு களிடையிலோ பிரிந்த மக்கள் இணைவை விரும்பினும், மொழியும் பண்பாடும் தொடர்ச்சியான பிரதேசமும், தம்மளவில், ஒரு தேச அரசை உருவாக்கப் போதா என்பது சமகால யதார்த்தம்.

ஐரோப்பிய நாடுகள் அடிமைகளாகவோ ஒப்பந்தக் கூலிகளாகவோ கொலனிகளிற் குடியேற்றிய ஆபிரிக்க, இந்திய, சீன மக்கள் கரிபியன் தீவுகள் உட்பட அமெரிக்கக் கண்ட முழுமையிலும் இந்தியர்கள் இலங்கை, பீஜி, மொரீஷஸ் போன்ற நாடுகளிலும் தென்னாபிரிக்காவிலும் தனித் தேசிய இனங்களாக அடையாளம் பெற்றனர். குடியேற்றிய எல்லாருமே தமது மொழி அடையாளத்தைப் பேணவில்லை. அதை விட, இனக்கலப்பு தேசிய இன அடையாளத்துக்குப் புதிய பரிமாணங்களை ஈந்தது. வட, தென் அமெரிக்காக்களில் கொலனி ஆட்சி உருவாக்கிய தேச-அரசுகளின் முக்கிய பண்பு ஏதெனில், அவற்றின் பிரதான மொழியும் பண்பாடும் மதமும் அவ்வப் பகுதிகளின் பழங்குடி அடையாளங்களைப் புறந்தள்ளிக் கொலனிய வல்லரசின் அடையாளங் களாக இருப்பதாகும். தேசமோ தேசிய இனமோ இயல்பான வல்ல எனினும் அவை உருவான பின் அவற்றின் அரசியல்-சமூகப் பெறுமதியைப் புறக்கணிக்க இயலாது.

கொலனி ஆட்சிக் கீழ்த் கட்டாயமாயும் கட்டாயமின்றியும் நிகழ்ந்த குடிப்பெயர்வால் ஏலவே சிக்கலான தேசிய அடையாளம், நவகொலனியத்தின் கீழ், உள்நாட்டுப் போர், பொருளாதார நெருக்கடி ஆதியவற்றின் விளைவான பெரும் இடப்பெயர்வுகளால் மேலுஞ் சிக்கலாகிறது. பஞ்சம், பேரிடர், பொருளாதார நெருக்கடி ஆதிய கட்டாயங்களிடையே, சுயவிருப்பிலும் மியான்மாரின் ரொஹிங்யாக்கள் போன்று கட்டாய வெளியேற்றலாயும் சமகாலப் புலப்பெயர்வு நிகழ்கிறது. இது தேசியப் பிரச்சினையை மேலுஞ் சிக்கலாக்குகிறது.

### பிற தேசியப் போக்குகள்

ஐந்து நூற்றாண்டுகளாக இன ஒழிப்புக்கும் ஒதுக்கலுக்கும் உட்பட்டு விளிம்பு நிலையிலிருந்த தென்னமெரிக்கப் பழங்குடிச் சமூகங்கள் பலதை

அரசுகள் தேசிய இனங்களாகவோ தேசிய சிறுபான்மைகளாகவோ ஏற்றன. சில நாடுகளிற் பழங்குடி மொழிகள் சட்ட அங்கீகாரம் பெற்றன. க்வெச்சா, அய்மரா மொழிகள் 1975ல் பெருவில் அரசகரும மொழிகளாகின. வெனெசுவேலா 1999இலும் பொலிவியா 2009இலும் பழங்குடி மொழிகள் அனைத்தையும் அரச-கரும மொழிகளாக்கின.

மத்திய, தென் அமெரிக்கக் கண்டங்களிற் போலன்றி, வடக்கில் மூன்று நாடுகளே உள்ளன. மெக்சிகோ அதிகார அடுக்கில் ஐரோப்பியக் குடியேறிகளை அடுத்து மெஸ்ற்றிஸோ (Meztizo) வெள்ளை–பழங்குடிக் கலப்பினத்தோர் உள்ளனர். பழங்குடிகள் கணிசமான தொகையினராய் வாழும் தென் மெக்சிகோவை விட்டாற், பழங்குடிகள் பிற சமூகங்களிடை சிதறி வாழ்கின்றனர். 31 அரசுகளைக் கொண்ட சமஷ்டியான மெக்சிகோவின் 1917ஆம் ஆண்டு அரசியல் யாப்புப் பழங்குடிகட்குச் சுயாட்சி உட்பட்ட பல உரிமைகளை உறுதிப்படுத்தினும் ஒவ்வொரு அரசிற்கும் யாப்பு அனுமதிக்கும் சட்டமியற்றும் அதிகாரங்கள் பழங்குடிகளின் உரிமைகளைக் குறுக்குகின்றன. (தகவல்: "Advancing Indigenous Peoples' Rights in Mexico"). அதை மறுத்து, மெக்சிகோவில் தென்முனையிலுள்ள சியபாஸ் மாகாணத்தில் 1994ல் அரசுக்கு எதிராகப் போர் தொடுத்த ஸபட்டிஸ்ற்றா (Zapatista) இயக்கம் சியபாஸின் கணிசமான நிலப்பரப்பை இன்னமும் தன் கட்டுப்பாட்டிற் கொண்டுள்ளது. மெக்சிகோவிலிருந்து பிரியாத போதும் சுயாதீனமாகச் செயற்படும் ஸபட்டிஸ்ற்றா ஆட்சி பல்லினத் தன்மையுடையது.

ஐரோப்பியக் குடியேறிகளின் ஆதிக்கத்திலுள்ள கனடாவிலும் அமெரிக்கா எனப்படும் ஐக்கிய அமெரிக்க அரசுகளிலும் முற்றாக ஒதுங்குண்ட பழங்குடியினரின் நீண்டகால இன ஒழிப்பும் பிரதேச இழப்பும் போகப் பிற இனங்களுடன் ஏற்பட்ட கலப்பையும் கணிப்பின் எப் பழங்குடிச் சமூகமும் ஒரு தேச–அரசாக அமையும் வாய்ப்பு அரிது.

1969ல் நோர்மன் லூயிஸ் எழுதிய இன-ஒழிப்பு (Norman Lewis, 1969) என்ற கட்டுரையையடுத்துப் பழங்குடியினரின் மனித உரிமைகள் உலகின் கவனத்தை ஈர்த்தன. 1980களின் பிற்பகுதி தொட்டுப் பழங்குடிகளின் சமூக உரிமை இயக்கங்கள் வேகமடைந்தன. இன்று, கனடாப் பழங்குடிகளும் சில அமெரிக்கப் பழங்குடிகளும் தம்மைத் தேசங்களென்கின்றன. எனினும் பழங்குடிச் சமூகங்களின் பன்முக அடையாளங்கள் தனித்தனி இன அடிப்படையிற் பிரிவினைக்கு ஒவ்வா. அவ்வாறான பிரிவினையை அம்மக்கள் வேண்டவில்லை. இன அடையாள உரிமையும் பிரதேச உரிமையும் நாட்டின் வளங்களில் உரிய பங்கும் ஒவ்வொரு சமூகமும் தனக்குப் பொருந்தும் வாழ்க்கை முறையைப் பின்பற்றும் அதிகாரமுமே அவர்கள் வேண்டுவன.

எனினும் பழங்குடிச் சமூகங்களின் பன்முக அடையாளங்கள் தனித்தனி இன அடிப்படையிற் பிரிவினைக்கு ஒவ்வா. அவ்வாறான பிரிவினையை அம்மக்கள் வேண்டவில்லை.

இவ்வாறு, அமெரிக்கக் கண்டங்களில் வாழும் பழங்குடிகளின் 'தேசிய அபிலாசைகள்', உலகின் பிற பகுதிகளில், குறிப்பாக ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் நாம் காணும் தேசிய அபிலாசைகளினின்று வேறுபடுவன. வேண்டின், அவற்றை இந்தியப் பழங்குடிகளின்

அபிலாசைகளுடன் ஒப்பிடலாம். அடிமை முறையை நீக்கிய அமெரிக்காவில் குடி-உரிமை இயக்கத்தின் (Civil Rights Movement) போக்கில், குறிப்பாக 1945ல் 2ஆம் உலகப் போரின் முடிவு முதல் 1965 வரை, விருத்தி பெற்ற "கறுப்பு உணர்வு நிலை" பழங்குடிகளின் இனத்துவ உணர்வுடன் பல பொதுப் பண்புகளையுடையது.

ஐரோப்பா பரவலும் உலாவி வாழ்ந்த 'ஜிப்ஸிகள்' போன்ற நாடோடி மக்களை ஒதுக்கி அவர்களின் பாரம்பரியப் பிரதேசங்களைப் படிப்படியாக மறுத்த தேச அரசுகளின் உருவாக்கம், ஐரோப்பிய துருவப் பிரதேசத்தில் 'சமி' (Sami) இனத்தின் பிரதேச உரிமையிற் குறுக்கிடுகிறது. எழுந்தமான முறையில் எல்லைகளை வகுத்த ஆபிரிக்காவில், அரசுகளின் உருவாக்கம் தேச எல்லைகளை அறியாத மாசை (Maasai) போன்ற மந்தை-மேய்ப்புக் குலமரபுக் குழுக்கள் உட்படப் பல சமூகங்களை நாடுகளிடையே பிரித்தது. பொருளாதார விருத்தி அவர்களின் வாழ்வாதாரங்களிற் கைவைக்கிறது [https://www.culturalsurvival.org/publications/cultural-survival-quarterly/maasai-autonomy-and-sovereignty-kenya-and-tanzania].

## சுயநிர்ணயமும் பிரிவினைப் போராட்டங்களும்

சுயநிர்ணயம் என்பது ஒரு அரசிற்குட்பட்ட தேசமொன்று பிரிந்து செல்லும் உரிமையைக் குறிக்கும். அது பிரிவினையை ஒரு தெரிவாக ஏற்கிறதேயொழியக் கட்டாயமாக்கவில்லை. தேசியம் இயல்பானதல்ல என்பதாலும் அது குறிப்பிட்ட வர்க்க நலன்கள் சார்ந்தது என்பதாலும் அதை முற்றிலுங் கற்பனையானது எனவும் வரலாற்று முக்கியமற்றது எனவும் மறுக்கவியலாது. கற்பனையோ இல்லையோ, தேசியம் இருக்கிறது. ஒடுக்குவோருக்கும் ஒடுக்கப்படுவோருக்கும் தேசியத்துள் ஒரு வகிபாகம் உள்ளது. இப்புறநிலை அடிப்படையிற் தேசியத்தை நோக்கத் தகும். தேசியத்தின் உள்ளடக்கத்தையும் புறநிலைகளையுஞ் சார்ந்தே, தேசங்களதும் தேசிய இனங்களதும் சுயநிர்ணய உரிமையை அணுகவேண்டும். சுயநிர்ணயக் கொள்கையின் நடைமுறை வியாக்கியானம் எப்போதுந் தெட்டத்தெளிவாயிருக்கவின்லை

சுயநிர்ணயம் என்பது ஒரு அரசிற்குட்பட்ட தேசமொன்று பிரிந்து செல்லும் உரிமையைக் குறிக்கும். அது பிரிவினையை ஒரு தெரிவாக ஏற்கிறதே யொழியக் கட்டாயமாக்க வில்லை.

ஐரேப்பியப் பேரரசுகள் பிற நாடுகளை ஆதிக்கத்துக்குட்படுத்திய சூழலில், லெனின் முன்னர் குறிப்பிட்ட சுயநிர்ணயக் கொள்கையை முன்வைத்தார். தேசங்களின் சமத்துவத்தை ஏற்ற அக் கொள்கையைக் கொலனிகளின் விடுதலைக்கு நீடிப்பது எளிதாயிருந்தது. சுயநிர்ணயத்தை ரஷ்யப் புரட்சித் தொடர்பில் லெனின் செயற்படுத்தியதால், அது ரஷ்யப் பேரரசு ஒடுக்கிய அனைத்துத் தேசங்களிடையிலும் சுயதெரிவின் அடிப்படையில் ஒற்றுமையைப் பேணி, சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை இயலுமாக்கியது. சுயநிர்ணய உரிமையை லெனின் வலியுறுத்திய நோக்கம், பிரிவினையை ஊக்குவித்தற்கு மாறாகச், சுயவிருப்பின் அடிப்படையில் தேசங்களிடையே ஒற்றுமையை இயலுமாக்குவதே.

ஏகாதிபத்தியம் சுயநிர்ணயத்தை அவ்வாறு நோக்கவில்லை. முதலாம் உலகப் போரையடுத்து 1918ல் அமெரிக்கச் சனாதிபதி வூட்றோ வில்சன் முன்வைத்த சுயநிர்ணயக் கருத்தாக்கம் போர்க்கால மூலோபாயங்களையும் வல்லரசுகளிடையிலான ராஜதந்திரத்தையும் பற்றியதன்றித் தேசியப் பிரச்சனையின் இனத்துவ, சமூகக் கவனிப்புகளைக் கொண்டதல்ல. சுயநிர்ணயத்தின் தேவைகள் பொதுவாக ஏகாதிபத்திய நலன்களுடன் முரண்பட்டதால் வில்சனின் கருத்துகளைத் தேச வேறுபாடின்றிப் பாவிக்க இயலவில்லை. அதைவிட, அச்சுயநிர்ணயம் நேர்மையற்றது: 1918க்குச் சிலகாலம் முன்பு, அமெரிக்கப் படைகள் நிக்கராகுவாவையும் (1912) ஹெயிற்றியையும் (1914) டொமினிக்கன் குடியரசையும் (1916) கியூபாவையும் (1906 முதல் 1917 வரை மும்முறை) கைப்பற்றின. அத்துடன், மத்திய அமெரிக்காவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா அங்கு வன்முறை நிர்ப்பந்தத்தைப் பிரயோகித்தது. அமெரிக்காவின் சுயநிர்ணயம் அமெரிக்க ஆதிக்கத்தைப் பற்றியதன்றித் தேசங்களின் சுயநிர்ணயம் பற்றியதல்ல என்பதை இன்றுவரை ஒன்றோடொன்று முரண்படும் அதன் நிலைப்பாடுகள் உணர்த்தும்.

அமெரிக்காவின் சுயநிர்ணயம் அமெரிக்க ஆதிக்கத்தைப் பற்றியதன்றித் தேசங்களின் சுயநிர்ணயம் பற்றியதல்ல என்பதை இன்றுவரை ஒன்றோடொன்று முரண்படும் அதன் நிலைப்பாடுகள் உணர்த்தும்.

ஐ.நா. சபையின் மெய்யியலில் உட்பொதிந்த சுயநிர்ணய உரிமை 1948ல் ஐ.நா. சபை ஏற்று அறிவித்த உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தில் (Universal Declaration of Human Rights) அடங்காவிடினும், ஐ.நா. சபைப் பிரகடனங்களிலும் கூட்டு ஒப்பந்தங்களிலும் அனைத்து மக்கள் திரள்களதும் சுயநிர்ணயத்துக்கு உலகளாவிய உரிமையாகயும், அதற்கமையத், தமது அரசியற் தகைமையைச் சுதந்திரமாகத் தீர்மானிக்கவும் தமது பொருளாதார, சமூக, பண்பாட்டு விருத்தியைச் சுதந்திரமாக முன்னெடுக்கவும் உள்ள உரிமையாக சுயநிர்ணய உரிமை வரைவிலக்கணப்பட்டது. எனினும் உறுப்பு அரசுகளின் இறைமை பற்றிய அக்கறைகளால், ஐ.நா.வின் நடைமுறையிலும் சர்வதேசச் சட்டத்திலும் சுயநிர்ணய உரிமை என்ற கருத்தாக்கம் மங்கியுள்ளது. குறிப்பிடத்தக்கவாறு, 1996ஆம் ஆண்டு வெளியான இனப் பாரபட்சத்துக்கெதிரான பின்வரும் பரிந்துரை கவனிக்கத்தக்கது:

“[சுயநிர்ணய உரிமை என்பது] மக்களின் சமவுரிமை நியதிக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் உடன்பாடாக நடந்து அதன் மூலம் பிரதேச முழுதிலுமுள்ள மக்களனைவரையும் எவ்வித பாகுபாடுமின்றிப் பிரதி நிதித்துவஞ் செய்யும் அரசாங்கத்தையுடைய சுயாதிபத்தியமும் சுதந்திரமுங் கொண்ட அரசுகளின் பிரதேச ஒருமைப்பாட்டையோ அரசியல் ஐக்கியப்பாட்டையோ முற்றாகவோ பகுதியாகவோ கூறு படுத்தவோ ஊறுபடுத்தவோ முனையும் எச் செயலையும் அங்கீகரித்தற்கோ ஊக்குவித்தற்கோ உரியதாகக் கொள்ளப்படலாகாது” [Equality of ethnic identity Committee on the Elimination of Racial Discrimination, General Recommendation 21, The right to self-determination (Forty-eighth session, 1996)].

ஒரு அரசு "மக்களின் சமவுரிமை நியதிக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் உடன்பாடாக நடந்து அதன்மூலம் பிரதேச முழுதிலுமுள்ள மக்கள னைவரையும் எவ்வித பாகுபாடுமின்றிப் பிரதிநிதித்துவஞ் செய்யும் அரசாங்கத்தை உடையது" எனக் கருத இடமிருப்பின், மேற்கூறியபடி கட்டுண்ட சுயநிர்ணயம், பிரிந்துபோகும் உரிமையை உள்ளடக்காது. அந்த அரசு ஒழுங்காக நடந்துகொள்ளத் தவறின் மட்டுமே அது அவ்வுரிமையை உள்ளடக்கும். இது நடைமுறையில் மக்கள் தமது அரசியல் தகைமையைச் சுதந்திரமாகத் தீர்மானிக்கவும் தமது பொருளாதார, சமூக, பண்பாட்டு விருத்தியைச் சுதந்திரமாக முன்னெடுக்கவுமான உரிமையை மறுக்கும் 'உள்ளக சுயநிர்ணயம்' என்ற கலங்கலான பதத்துடன் அடையாளப்படும். இதன்படி, 'சர்வதேசச் சமூகம்' என் அறியப்படும் ஏகாதிபத்திய நாடுகள், முக்கியமாக ஐ.நா. சபையைக் கட்டுப்படுத்தும் பெருவல்லரசு, குறிப்பிட்ட ஒரு அரசை இலக்கு வைக்கும் போது, அந்த அரசு சட்டரீதியான அந்நியக் குறுக் கீட்டின் மூலம் பிரிவினைக்காளாகும் அபாயத்தை எதிர்நோக்கும்.

கொலனி ஆட்சி மூன்றாமுலகில் உருவாக்கிய அல்லது ஊக்குவித்த தேசிய இனப் பிரச்சினைகள் பிரிவினைப் போராட்டங்கட்கு வழிகோலின. ஆசியாவில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மியான்மார், துருக்கி ஆகிய நாடுகளின் ஆயுதப் போராட்டங்களிற் சில இன்னமுந் தொடர்கின்றன. வட ஆபிரிக்காவில் எதியோப்பியாவிலிருந்து எரித்திரியாவின் பிரிவும் அண்மைய தென் சூடானின் பிரிவும் இன்னமும் சூடானிலும் சோமாலியாவிலும் தொடரும் பிரிவினைப் போராட்டங்களும் முக்கியமானவை. ஆபிரிக்காவின் பிற பகுதிகளில் நைஜீரியாவிற் தோற்ற பியா∴ப்ரா பிரிவினைப் போராட்டத்தை (1967-70) விட்டால் கொங்கோவிலிருந்து கட்டடாங்காவின் குறுகிய காலப் பிரிவினை (1960-63) உட்பட மற்றவை மேற்குலகத் தூண்டுதலின் விளைவுகளே. இவற்றில் எதற்கும் வலுவான தேசிய இன உணர்வு அடிப்படைக்கு ஆதாரமில்லை.

கொலனி ஆட்சி மூன்றாமுலகில் உருவாக்கிய அல்லது ஊக்குவித்த தேசிய இனப் பிரச்சினைகள் பிரிவினைப் போராட்டங்கட்கு வழிகோலின

சோவியத் ஒன்றியம் பலவீனப்பட்ட காலத்தில் யூகொஸிலாவியாவிற் பிரிவினைப் போக்குகள் ஓங்கின. 1991க்குப் பின் யூகொஸிலாவிய சமஷ்டியின் ஒவ்வொரு குடியரசும் தனி நாடாகப் பிரிந்தது. சேர்பியா மேலுந் துண்டாடப்பட்டு 2008ல் அல்பானிய இனப் பெரும்பான்மை கொண்ட கொஸோவோ மாகாணம் தனது சுதந்திரத்தை அறிவித்தது.

இலத்தீன் அமெரிக்காவில் அமெரிக்க மேலாதிக்கத்திற்கெதிராகத் தமது இறைமையை வலியுறுத்தும் வெனிசுவேலாவிலும் பொலிவியாவிலும் பொருளாதார வளமிக்க மாகாணங்கள் பிரிவினை கோருமாறு தூண்டப்பட்டன.

எனவே, ஒரு சமூகம் ஒரு தேச அரசாக அமையத் தகுதியுடை யதாயினும் அது தன் சுயநிர்ணய உரிமையைப் பாவித்துப் பிரிவது பெரிதும் புறக் காரணிகளிலேயே தங்கியுள்ளது.

### பழங்குடிகள்

இன, மொழி, பண்பாட்டு அடிப்படையில் நோக்கின், தேசமென்றோ தேசிய இனமென்றோ உரிமை கோரும் எச்சமூகத்தினதினும் வலிய அடையாளம் பழங்குடிச் சமூகங்கட்குண்டு.

இன, மொழி, பண்பாட்டு அடிப்படையில் நோக்கின், தேசமென்றோ தேசிய இனமென்றோ உரிமைகோரும் எச் சமூகத்தின தினும் வலிய அடையாளம் பழங்குடிச் சமூகங் கட்குண்டு.

அமெரிக்கக் கண்டங்கள் பரவலுங் கடந்த சில தசாப்பங்களாகப் பழங்குடிகள் வலியுறுத்தும் தேசிய-உரிமைக் கோரிக்கைகளில் மொழியும் பண்பாடும் வாழ்வாதார, பிரதேச உரிமைகளும் அடங்கினும் பிரிவினைக் கோரிக்கை கூறப்படவில்லை. அமெரிக்காவின் நடுவிலுள்ள சியோ (Sioux) பழங்குடிப் பிரதேசத்தை லகோட்டா (Lakota) குடியரசு என வரலாற்று அடிப்படையில் ஏற்குமாறு கோரிக்கைகள் இருந்தாலும் அதற்கு சியோ பழங்குடியினரின் ஆதரவு போதாது. தொல்குடி அரசாங்கங்களை இறைமையுள்ள தேசங்களாக அமெரிக்கா 1934ல் இந்தியர் மீளமைப்புச் சட்டம் (Indian Reorganization Act) ஏற்பினும் அவ்விறைமைக்கு நடைமுறைப் பெறுமதி குறைவு.

உலகளாவிய கனிவளத் தேடல் பழங்குடிகளின் இருப்பை மிரட்டுகிறது. பாரபட்சம், இனவாதம், ஒடுக்குமுறை, ஓரங்கட்டல், சுரண்டல் ஆகியவற்றினின்று பழங்குடிகளைப் காக்கும் நோக்கில், ஐ.நா. பொதுச் சபை (அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசீலாந்து ஆகியவற்றின் கடும் முட்டுக்கட்டைகளிடை) "பழங்குடி மக்களின் உரிமைகள் பற்றிய ஐ.நா. பிரகடன வரைவை" (UN Draft Declaration on Rights of Indigenous Peoples) 2006ஆம் ஆண்டு ஏற்றது [https://www.un.org/development/desa/indigenouspeoples/declaration-on-the-rights-of-indigenous-peoples.html]. எழுதி உடன்பட 20 ஆண்டுகளெடுத்த பிர கடனத்தின் பின்பும் அரசுகள் பிரகடனத்தின் நெறிகளை மீறுகின்றன. [மேலுந் தகவல்கட்கு: Anup Shah, "Rights of Indigenous People", www.globalissues.org/article/693/rights-of-indigenous-people].

தேசியம் பற்றிய அரசியற் கதையாடல்கள் பொதுவாகப் பழங்குடிகளைத் தேசங்களாகக் கொள்வதில்லை. அவர்களை விளிம்பு நிலைமாந்தர் எனவும் சிறுபான்மையினர் எனவும் கூறும் வழமையுள்ளது. இந்திய அரசியல் யாப்பு அவர்களையும் பிற்பட்ட சாதியினரையும் பின்தங்கிய வர்க்கங்கள் எனக் குறிக்கிறது. அவர்களுடைய அடையாளத்தையும் இருப்பையும் நிலைப்பையும் உறுதிசெய்ய அவர்களைத் தேசங்களாகவோ தேசிய இனங்களாகவோ ஏற்பது தகும். இதற்கு உடன்படவே கனடாவின் பழங்குடிகள் தம்மைத் தேசங்களெனக் குறிக்கின்றனர்.

### தேசிய இனங்களும் தேசிய சிறுபான்மையினரும்

ஐரோப்பிய இனக்குழுக்கள் பலதின் தேசிய அடையாளங்கள் முதலாளிய தேச-அரசின் விருத்திக்குப் பலியாயின. தேச-அரசின் தோற்றமும் முதலாளிய விருத்தியும் ஒரு ஆதிக்க மொழிக்கோ பொது மொழிக்கோ வழி செய்தன. பல சிறுபான்மை மொழிகளையும் இனக்குழு

அடையாளங்களையும் ஓரங்கட்டியதில் முதலாளியத்தின் தீர்மானமான பங்கு போக, அடையாளங்களை நசுக்கும் கருவியாக அரசும் இயங்கியது. எனினும் ஸ்பெயினின் கற்றலன் (Catalan) பாஸ்க் (Basque) சமூகங்களும் ஆங்கில ஆதிக்கத்தால் மொழியை இழந்த ஐரிஷ் சமூகமும் தேசங்களாகத் தம்மை நிலைநிறுத்தின.

மூன்றாம் உலகிற் கொலனிய எதிர்ப்புத் தோற்ற பின், கொலனியம் கொலனிகளிலிருந்த முதலாளியத்துக்கு-முந்திய சமூக அதிகார அடுக்குகளைத் தொடரவிட்டது. எனவே, ஐரோப்பிய முதலாளியத்தின் கீழ் நடந்தது போல இனக்குழுக்களும் உள்நாட்டுச் சமூகங்களும் சங்கமமாகவில்லை. அதனாற், சிறு பிராந்தியங்களும் நாடுகளுங் கூடப், பெருந்தொகையான தனித்துவமான இன, மத, சாதிக் குழுக்கள் உட்பட்ட சமூகப் பிரிவுகளைக் கொண்டுள்ளன.

ஒடுக்கப்படும் ஒவ்வொரு சமூகப் பிரிவையும் ஒரு தேசமாகவோ தேசிய இனமாகவோ கொண்டு அவ்வடிப்படையில், சுரண்டலுக்கும் ஒடுக்கலுக்கும் தீர்வாகப் பிரிவினையைப் பரிந்துரைக்கும் போக்கும் உள்ளது. அது தேசம் என்ற கருத்தாக்கமும் அதன் வரலாற்று விருத்தியும் பற்றிய விளக்கமின்மையின் அடையாளமே. பேணக்கூடிய பொருளாதாரத்தையும் அரசின் இயல்பையும் இவ்வாறான ஆலோசனைகள் கருத்திற் கொள்வதில்லை. தனது அரசியல் இருப்பின் பாங்கைத் தீர்மானிக்க ஒரு இனக்குழுவின் உரிமையை ஏற்கும் அதே வேளை, சுயநிர்ணய உரிமையை வெறுமனே பிரிந்துபோகும் உரிமை எனக் குறுக்கல் ஆபத்தானது.

தொடர்ச்சியான பிரதேசமொன்றை மறுத்தும் சனத்தொகையின் பல்வேறு பிரிவினரை வலிந்து தன்வசமாக்கியும் பண்பாட்டு, மொழி, மத உரிமைகளை மறுத்தும், பிற தேசிய, இனக்குழு அடையாளங்கள் அனைத்தையும் நசுக்க முற்படும் பெரும்பான்மை அல்லது ஆதிக்க இனத்தின் பேரினவாதமுமுள்ளது. இத்தகைய போக்கு மக்களைப் பிரிப்பதோடு ஒடுக்கும் வர்க்கங்களின் கைகளை வலுப்படுத்துகிறது. எனவே சுயநிர்ணயம் பிரிந்து செல்லும் உரிமைக்கும் அப்பால் விரிவது தகும்.

லெனினின் நோக்கிற் சுயநிர்ணய உரிமை பொதுவான தேவையைக் கொண்ட தேசங்களையும் தேசிய இனங்களையும் ஒன்றுபடுத்தப் பயன்வலிவுள்ள ஒரு வழிமுறையாகும். இன்றைய பொதுத் தேவை, ஏகாதிபத்திய மேலாதிக்கத்தையும் சுரண்டலையும் மறுப்பதாகும். அதற்கேற்ப ஒடுக்கப்பட்ட மக்களை ஐக்கிமாக்கவேண்டின், தனித்தனியே அரசுகளாக அமைய வாய்ப்பற்ற தேசிய இனங்கட்கும் தேசிய இனங்களாக அமையாத ஆனாற் தனித்துவமான சமூகங்களான தேசிய சிறுபான்மையினருக்கும் சுயநிர்ணய உரிமைச் சிந்தனைக்கமைய, அவர்கட்கு உடன்பாடான சுயாட்சிகளை வலியுறுத்துவது தகும்.

லெனினின் நோக்கிற் சுயநிர்ணய உரிமை பொதுவான தேவையைக் கொண்ட தேசங்களையும் தேசிய இனங்களையும் ஒன்றுபடுத்தப் பயன்வலிவுள்ள ஒரு வழிமுறை யாகும்.

பல நாடுகளின் தொல்குடிப் பிரதேசங்களில், ஒவ்வொன்றும் தனித்துவமான இனக்குழுக்கள் ஒரே பிரதேசத்தைப் பகிர்கின்றன.

பொருளியற் செயற்பாடுகளின் விரிவும் இனக்குழு ஊடாட்டத்தின் நெருக்கமும் அடையாளங்களின் ஒன்றிணைவையோ எந்த அடையாளத்தினதும் நீக்கத்தையோ வற்புறுத்தவில்லை. ஆயினும், வணிகமும் நகரமயமாக்கமும், இன-மொழி அடையாளங்களின் பிரதேச எல்லைகளைக் கலங்கலாக்கி ஒரு பிரதேசத்திற் பல்வேறு இனக்குழுக்கள் கூடிவாழ்வதையும் பன்மொழிச் செயற்பாட்டையும் இயலுமாக்கின. பன்மொழிச் செயற்பாடென்பது பல்லினச் சமூக உறுப்பினர் ஒவ்வொருவரும் பன்மொழிப் புலமையுடையோர் என்பதல்ல. மாறாகச், சனத்தொகையிற் பெரும்பாலோர் தத்தமது சமூகச் செயற்பாடுகட்குத் தேவையான மொழிகளைப் பயன்படுத்துவர் என்பதையே அது குறிக்கிறது. எனவே, மொழி பிளவுபடுத்தும் சக்தியாகத் தேவையில்லை. இனக்குழுக்கள் கூடி வாழ்ந்து சில மொழிகளைப் பகிரும்போது, அப் பொதுமை, பொதுவான ஒரு மொழியின் இடத்தில், பொதுவான அல்லது பகிரும் மொழிகள் என்ற அடிப்படையில் ஒரு தேசத்தையோ தேசிய இனத்தையோ வரையறுக்கலாம்.

எனவே, நவகொலனிய ஆதிக்கத்தினதும் சுரண்டலினதும் அவைக்கெதிரான விடுதலைப் போராட்டத்தினதும் பின்னணியில் மூன்றாமுலகின் தேசியப் பிரச்சினையைக் கையாளுகையில் நவகொலனிய ஒடுக்குமுறைக்குட்பட்ட நாடுகளதும் பிரதேசங்களதும் புறநிலை யதார்த்த அடிப்படையில் தேசியப் பிரச்சினையை அணுகல் தகும்.

தேசம் என்பது தனியொரு இனத்தையோ இனக்குழுவையோ கொண்டதென வரையறுத்து அதனடிப்படையில் அந்தத் தேசத்திற்குப் பிரிவினையையோ பிரிந்துபோகும் உரிமையையோ கோரும் போக்கு உள்ளது. இதன் தர்க்கரீதியான அந்தம் எதுவெனின் பெரும்பாலான மூன்றாமுலக நாடுகளைப் தேச அரசுகளாகக் கூறுபோடுவதாகும். அது நிச்சயமாக ஒடுக்கப்பட்ட சமூகங்களின் நன்மைக்கல்ல.

தேசம் என்பது தனியொரு இனத்தையோ இனக் குழுவையோ கொண்டதென வரையறுத்து அதனடிப் படையில் அந்தத் தேசத்திற்குப் பிரி வினையையோ பிரிந்து போகும் உரிமையையோ கோரும் போக்கு உள்ளது.

உழைப்போரின் இடப்பெயர்வாலும் போர், இன ஒடுக்கல், இயற்கை அனர்த்தங்கள், பொருளாதார நெருக்கடிகள் ஆதிய காரணங்களால் நிகழும் குடிப்பெயர்வுகளாலும் பல்லினச் சமுதாயங்கள் முன்னெப்போதினும் பெரிய யதார்த்தமாகின. எவ்வாறாயினும், இன்றைய நவகொலனியச் சூழலிற், பல்லினச் சமுதாங்கள் தம்மைப் பல்லினத் தேசங்களாகவோ தேசிய இனங்களாகவோ உருவாவதை ஊக்குவிப்பது தகும்.

இனக்குழு அடையாள அடிப்படையிற் பல்லினச் சமுதாயங்களைப் பிளக்கும் முயற்சிகளை எதிர்க்குமளவுக்குத் தேசிய ஒற்றுமை என்ற பெயரில் எந்த இனக்குழு அடையாள மறுப்பையும் எதிர்ப்பது முக்கியம்.

### ஏகாதிபத்தியக் கருவியாகச் சுயநிர்ணயம்

இனக்குழுக்களின் மனக்குறைகளைப் பயன்படுத்தி ஒடுக்கப்பட்ட மக்களைப் பிரித்தல் புதிதல்ல. அது தொன்மையான கொலனிய

மூலோபாயமாகும். எனினும், மிக அரிதாகவே, ஏகாதிபத்தியக் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களை தனி நாடுகளாகவோ நாடுகளின் கூட்டாகவோ நிறுவ இன அடையாளம் பயன்பட்டது. கொலனி ஆட்சியின் இறுதிப் பிரதேசமான சகாராவுக்குத்-தெற்கான ஆபிரிக்காவில், கொலனி ஆட்சியின் சரிவின் பின்பே பிரிவினை ஒரு ஏகாதிபத்தியச் செயற்திட்டமாகியது.

சீனா தனக்குரிய ஐ.நா. ஆசனத்தை அதுவரை பிடித்திருந்த "தேசிய சீனா" எனும் தாய்வானிடமிருந்து 1972ல் பறித்த பின், அமெரிக்கா தாய்வானிலும் திபெத்திலும் பிரிவினையை ஊக்குவிக்கிறது. சோவியத் ஒன்றியத்தின் உடைவின் பின், ரஷ்யாவில் செச்சென்யா பிரிவினையையும் பின்னர் சீனாவின் வடமேற்கில் உய்கூர்களின் பிரிவினையையும் தூண்ட அமெரிக்கா சுன்னி-முஸ்லிம் அடிப்படை வாதிகளை பாவித்தது. யூகோஸிலாவியாவின் உடைவிலும் பின்பு கொஸொவோ பிரிவினையிலும் தென் சூடான் பிரிவினையிலும் மேற்குலகின் பங்கு பெரிது.

தெரிந்தெடுத்த மக்கள் திரள்களின் சுயநிர்ணய உரிமையின் காவலனாகத் தன்னைக் காட்டுவது அமெரிக்க அயற் கொள்கையின் ஒரு முக்கிய பகுதியாகும். நாடுகளின் பிரிவினை பற்றி மேற்குலக நோக்கில் ஒன்றுக்கொன்று முரணான நிலைகளைக் காணலாம்.

பொஸ்னியாவிலும் கொஸொவோவிலும் தென் சூடானிலும் தேச சுயநிர்ணயத்தின் பெயரிலும் பொலிவியாவிலும் வெனசுவேலாவிலும் தேசிய அடிப்படை ஏதுமின்றியும் பிரிவினைவாதிகளை ஊக்குவித்த அமெரிக்கா, குர்தியரின் பிரிவினைக் கோரிக்கை பற்றித் துருக்கி, ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் ஒன்றுக்கொன்று வேறுபடும் நிலைப்பாடுகளைக் கடைப்பிடிக்கிறது. பலஸ்தீனத்தில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பையும் அடக்குமுறையையும் அமெரிக்கா விடாது ஆதரிக்கிறது.

உண்மை ஏதெனின் நட்பு-நாடெதிலும் பிரிவினையைத் தவிர்க்கச் செயற்படும் மேற்குலகு தனது மேலாதிக்கத்துக்கு முரணான எந்த நாட்டிலிலும் பிரிவினையைத் துண்டத் தயங்காது. ஒடுக்கப்பட்ட எச் சிறுபான்மையினதும், குறிப்பாகச் சிறுபான்மைத் தேசிய இனங்களதும் பழங்குடிகளதும் குலமரபுக் குழுக்களதும் மெய்யான மனக்குறைகளை - அச்சமூகம் விரக்கிக்குட்படும் போது - தனக்குச் சாதகமாகப் பயன் படுத்தித் தன்னுடன் நட்புப் பாராட்டாத ஒரு அரசை இலக்குவைப்பது எந்த மேலாதிக்க வல்லரசுக்கும் எளிது. ஆனால் ஒரு வல்லரசு வேண்டும் ஆட்சி மாற்றம் நிகழ்ந்த பின் சிறுபான்மைச் சமுகம் புறக்கணிக்கப்படும்.

உண்மை ஏதெனின் நட்பு-நாடெதிலும் பிரிவினையைத் தவிர்க்கச் செயற்படும் மேற்குலகு தனது மேலாதிக் கத்துக்கு முரணான எந்த நாட்டிலிலும் பிரிவினையைத் துண்டத் தயங்காது.

**முடிவுரை**

தேசம், தேசிய இனம் ஆகிய கருத்தாக்கங்கள் பெருமளவும் அரசதிகாரந் தொடர்பானவை. தேசம் ஒன்றுக்குச் சுயநிர்ணய உரிமை (பிரிந்து

போகும் உரிமை) உண்டு என்பதை மையப்படுத்தியே சமூகங்கள் சில தம்மைத் தேசங்களாக அறிவிக்க முனைகின்றன.

தேசமாக அமைய வாய்ப்பிருப்பதால் மட்டும் ஒரு மக்கள்-திரள் பிரிந்து தனியரசாவதில்லை. அவ்வாறு பிரிய உரிமையும் விருப்பு மிருப்பதாற் பிரிவினை இயலுவதுமில்லை. புறக் குறுக்கீடுகள் பல சூழ்நிலைகளிற் பிரிவினைக்கு உதவியுள்ளன. ஆயினும் புற உதவிகளின் நோக்கமும் பிரிவினை கோரும் தேசத்தின் நோக்கமும் முரண்படலாம். அதன் பயனாக ஒரு ஆதிக்கத்தின் இடத்தில் இன்னொரு ஆதிக்கம் வரலாம்.

தேசங்களுக்குத் தமது இருப்பைத் தீர்மானிக்க உள்ள அதேயளவு உரிமை பிரிந்துசெல்லும் வாய்ப்பற்ற தேசிய இனங்கட்கும் உள்ளமையை ஏற்க வேண்டும். ஏனெனிற் கிளர்ச்சிகளும் உள்நாட்டுப் போர்களும் பிரிவினையைப் பற்றியன மட்டுமல்ல. நாடுகளின் சமூக உறுதிப்பாடின்றிப் பொருளாதார மேம்பாடு இயலாதது. எனவே மூன்றாமுலக அரசாங்கங் களும் தேசிய இனங்களும் தேசியப் பிரச்சனையை அதிகாரப் பரவலாக்கல் மூலம் சுமுகமாகத் தீர்ப்பது முக்கியம்.

இவ்விடத்துச் சுயநிர்ணய உரிமை என்பதைத் தனியே தேசங்களின் பிரிந்துபோகும் உரிமை எனக் குறுக்குவது பல தேசிய இனங்களின் தேசிய உரிமையை மறுக்கும். எனவே அதை அனைத்துத் தேசிய இனங்கட்கும் விரிவாக்குவதுடன் சுயநிர்ணய உரிமையென்பது ஒரு சமூகம் தனது அரசியல்-பொருளாதார-சமூக இருப்பைச் சுயாதீனமாகத் தீர்மானிக்கும் உரிமையென விளங்கிப் பிற சிறுபான்மைச் சமூகங்கட்கும் இயன்றளவு விரிக்கும் அதிகாரப் பரவலாக்கத்தை ஆராய்வது தகும்.

இவ்விடத்துச் சுயநிர்ணய உரிமை என்பதைத் தனியே தேசங்களின் பிரிந்துபோகும் உரிமை எனக் குறுக்குவது பல தேசிய இனங்களின் தேசிய உரிமையை மறுக்கும்.

## உசாத்துணைகள்


"Advancing Indigenous Peoples' Rights in Mexico", *https://www.ohchr.org/en/NewsEvents/Pages/IndigenousPeoplesRightsInMexico.aspx*

Anderson,B., Imagined Communities: Reflection on the Origin and Spread of Nationalism, Kindle edition, 1983 (London: Verso, 2006)

Anup Shah, "Rights of Indigenous People", *www.globalissues.org/article/693/rights-of-indigenous-people].*

Ernest Gellner, 1983, Nations and Nationalisn, Ithaca : Cornell University Press, p. 1; அடைவு: *https://en.wikipedia.org/wiki/Gellner%27s_theory_of_nationalism*

Equality of ethnic identity Committee on the Elimination of Racial Discrimination, General Recommendation 21, The right to self-determination (Forty-eighth session, 1996), U.N. Doc. A/51/18, annex VIII at 125 (1996), அடைவு: *https://www.uio.no/studier/emner/jus/humanrights/HUMR5508/v12 /undervisningsmateriale/General%20Recommendation%20No21-self-determination.pdf.*

Hobsbawm, E.J., 1990, Nations and Nationalism since 1780: Programme, Myth, Reality, Cambridge University Press.

Josep R. Llobera, 1999, Recent Theories of Nationalism, Institut de Ciències Polítiques i Socials, அடைவு: *https://www.icps.cat/archivos/WorkingPapers/WP_I_164.pdf?noga=1*

Lenin's Collected Works, 1972, Progress Publishers, Moscow, Volume 20, pp. 393–454; அடைவு: *https://www.marxists.org/archive/lenin/works/1914/self-det/index.htm]*.

Norman Lewis, 23.2.1969, "Genocide", Sunday Times Magazine, , London

Otto Bauer, 2000, The Question of Nationalities and Social Democracy, ed. Ephraim J Nimni, University of Minnesota Press, Minneapolis–London, pp. 19-138

Stalin, J.V., 1913, Marxism and the National Question, அடைவு: *https://www.marxists.org/reference/archive/stalin/works/1913/03a.htm#s1*

*https://www.culturalsurvival.org/publications/cultural-survival-quarterly/maasai-autonomy-and-sovereignty-kenya-and-tanzania*.

*https://www.un.org/development/desa/indigenouspeoples/declaration-on-the-rights-of-indigenous-peoples.html]*.